கவிஞர் குடத்தனையூர் சிவசேகரனது இரண்டாவது புதுக்கவிதைத் தொதியான 'அந்நியத்தின் விலாசம்' அண்மையில் வெளிவந்திருக்கின்றது. இந்நூல் வெளியீட்டு விழாவில் எனக்கு வாழ்த்துரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுமார் ஆறு வருடங்களுக்கு முன் அவரின் முதலாவது புதுக்கவிதை நூலான 'மட்டைவேலிக்கு தாவும் மனசு' மருதங்கேணி பிரதேச செயலக கலாச்சார விழாவில் வெளியிடப்பட்டது. அந்நூல் வெளியீட்டில் முக்கியமான உரை ஒன்றை ஆற்றவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

அன்றே சிவசேகரனை ஈழக் கவிதைத்துறையில் தனித்துவமாக வளரும் கவிஞராக அடையாளப் படுத்தியிருந்தேன். சிவசேகரன் இடைப்பட்ட காலத்தில் தனது அடுத்த படிநிலை வாசிப்பனுபவத்துடன் பல கவிதைகளை ஆக்கி குறும்பாக்கள் கொண்ட ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டதோடு சமூக வலைத்தளம், ஊடகங்கள் என்பவற்றில் தொடர்ச்சியாக கவிதைகளையும் கருத்துக்களையும் விமர்சனங்களையும் பகிர்ந்து வந்திருக்கின்றார். இவரின் பகிர்வுகள் பகிரப்பட்ட சந்தர்ப்பங்களில் பரவலான அறிமுகத்தையும் விமர்சனங்களையும் பெற்றிருந்தன. அவ்வாறு வெளிவந்த கவிதைகளிற் சிலவற்றை தொகுத்து இவ் 'அந்நியத்தின் விலாசம்' தொகுதியையும் தந்திருக்கின்றார்.

ஒரு இளைய படைப்பாளியாக ஓரளவு தொடர்ச்சியாக படைப்பு முயற்சிகளில் ஈடுபடும் சிவசேகரன் தற்போது ஈழத்தில் அனேகமாக எல்லா கலை இலக்கியப் படைப்பாளிகள் வாசகர்கள் மட்டங்களிலும் அறிமுகம் பெற்றிருக்கிறார். இக் குறுகிய காலத்தில் தனது படைப்பு முயற்சியைத் தாண்டி ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராகவும், இலக்கிய முயற்சிகளுக்கு தன் நெருக்கடி மிகுந்த வாழ்க்கைப் பயணத்தன் மத்தியிலும் சலிக்காது ஒத்துழைப்பவராகவும், பல்வேறு இலக்கிய நூல் வெளியீட்டு முயற்சிகளில் தானும் ஒரு பங்காளியாகத் தொழிற்படுபவராகவும், இலக்கியம் கவிதை இலக்கியச் செயற்பாடுகள் என்பன தொடர்பான கறாரான அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கும் ஒருவராகவும், தன்னை உருமாற்றி மெருகேற்றியுள்ளார்.

சிவசேகரனின் தாய் மண்ணான வடமராட்சி கிழக்கு மண் இயற்கைவளம் மிகுந்தது. எப்போதும் கலைகளில் ஊறித்திளைக்கின்ற ஒன்று. மீன்பிடியும் விவசாயமும் முக்கிய வாழ்வாதாரங்களாக திகழும் குறுகலான நீண்ட நிலத்துண்டில், இருபுறமும் அலைளால் தாலாட்டப்படும் தரைப் பகுதியில், மக்கள் தாம் உழைத்து களைத்து பொழுதுகளைப் போக்க கலைகளைப் படைத்ததும் சாமானியர்களும் கலை முயற்சிகளை கைக்கொண்டதும் வியப்பிற்குரிய ஒன்றல்ல. அண்ணாவிமார்களின் கூத்தும் பாட்டும் ஆற்றுகைகளும், கமக்காரர்களின் ஏற்றப்பாட்டும் ஏர்ப் பாட்டுக்களும், மீனவர்களின் அம்பாப்பாட்டுக்களும், இசைஞர்களின் இசைப்பாட்டுகளும், கவிஞர்களின் கவிதைகளும் என்று அம்மண்ணில் கலைகள் எப்போதும் களி நடம் புரிந்து கொண்டே இருக்கும்.

நாகர்கோவில் நாகதம்பிரான் வெற்றிலைக்கேணி பிள்ளையார் மண்டலாய்ப் பிள்ளையார், மருதங்கேணி கந்தசாமி கோவில் போன்ற சைவ ஆலயங்களும் மணற்காடு, செம்பியன்பற்று, தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, புல்லாவெளி போன்வற்றில் அமைந்துள்ள தேவாலயங்களும் வடமராட்சி கிழக்கின் கலைகளின் ஊற்றுக்கண்களாக அமைந்திருந்தன. ஆலய விழாக்களில் கலை முயற்சிகள் முக்கிய இடம் வகித்தன. மணற்காடு, பொற்பதி, குடத்தனை, அம்பன், நாகர்கோவில், குடாரப்பு, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு என நீண்டு விரியும் கிராமங்களும் நிலப்பரப்புக்களும் தனித்தன்மையான கலை அடையாளங்களை கொண்டு இன்றும் விளங்குகின்றன.

தொண்ணூறுகளுக்குப் பிறகு தொடர் யுத்த வடுக்களை சுமந்த போதும் 2004 இல் சுனாமி அவலத்திற்கு முகம் கொடுத்த போதும் இப்பிரதேசம் தன் தனித்துவங்களை இழக்காமல் போற்றிக் காத்துக்கொண்டது. இங்கு வாழும் கலைஞர்கள் மண்வாசத்தின் பாரம்பரியம் மாறமால் இயற்கையாக கலைகளைப் படைக்கும் ஆற்றல் உடையவர்களாவும், கோவில்களில் ஓதுவார்களாகவும், புராணப் பாடல்களுக்கு பயன் சொல்வோராகவும், பிரசங்கம் செய்வோராகவும், தேர்ந்த நாடக கலைஞர்களாகவும், தொழில் செய்யும் போதெல்லாம் கலைகளில் ஈடுபாட்டுடன் திகழ்பவர்களாகவும் விளங்குகின்றனர். மரபு ரீதியான செம்மையான கவிதைகளை எழுதிய பலர் தலபுராணங்களையும் ஆங்காங்கு கோயில் கொண்டுள்ள இறைவர்களை மீது சிறப்பான பாசுரங்களையும் ஆக்கியிருக்கின்றார்கள். 'குடா நீரூரான்' என்ற புனை பெயருடன் இவ்வாறான யாப்புக் கவிதைகளை எழுதிய திரு.சி.பசுபதி அவர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அதே நேரம் ஈழத்து புதுக் கவிதைத்துறையில் ஈடுபட்ட சிலர் வடமராட்சிக் கிழக்கை பூர்வீகமாகக் கொண்டிருந்தனர். அண்மையில் மறைந்த கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். இந்தக் கலைக் கவிப் பரம்பரையின் தொடர்ச்சியாக மரபுக் கவிதைகளையும் அதே நேரம் புதுக் கவிதைகளையும், நவீன கவிதைகளையும் ஆக்கக்கூடிய இளைய கவியாக இம்மண்ணிலிருந்து சிவசேகரன் முகிழ்ந்துள்ளார். இவரைப் போல பல இளம் கவிஞர்களும் கவிதாயினிகளும் அண்மைக் காலத்தில் இப்பிரதேசத்திலிருந்து கவிதைத் துறையில் இறங்கி இயங்கி வருவதும் முக்கியமானது.

சிவசேகரனுடைய முதல் நூல் புதுக்கவிதை வடிவில் அமைந்திருந்தது. தொடர்ந்து வடமராட்சிக் கிழக்கின் ஒரு சில ஆலயங்களுக்கான கவிதைகளையும் இசைப்பாடல்களையும் மரபுக்கவி வடிவங்களைச் சார்ந்து எழுதி ஏற்கனவே சிந்து வகைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டு ஆங்கிலத்தில் Lymaric என்ற அமைப்பை ஒத்த மஹாகவினால் ஈழத்தில் பிரபலப்படுத்தப்பட்ட 'குறும்பா' என்ற ஒரு வகை சந்த கவி வடிவத்தையும் இவர் அநாயசமாகக் கையாண்டு 'ஒரு கூடைக் குறும் பூ' என்ற குறும்பாக்கள் கொண்ட நூலையும் அண்மையில் வெளியிட்டிருந்தார். அதே சம காலத்தில் நவீன கவிதைகளின் உத்தி முறைகளையும் உள்வாங்கி இன்று ஈழத்தில் வெளிவரும் புது, நவீன, பின் நவீன கவிதைகளைப் போன்ற கவிதைகளையும் புதுமை மீதுற தனது தனித்தன்மையுடன் எழுதி வருகின்றார்.

‘உயிலடி’ வெளியீடாக தற்போது வெளியாகியுள்ள இவரது ‘அந்நியத்தின் விலாசம்’ தொகுதியில் சுமார் நூறு கவிதைகள் உள்ளன. இதிலுள்ள கவிதைகள் நவீன, பின் நவீன சாயலை அதிகம் கொண்டுள்ளன.

இயல்பான திறமையும், தேடிக்கற்ற தமிழறிவும், வாழ்க்கைப் போராட்டத்தின் ஊடாக பெற்ற அனுபவமும், நவீன இலக்கியங்கள் பற்றிய அறிமுகமும், இலக்கிய கர்த்தாக்களுடனான இடையறாத ஊடாட்டமும் சிவசேகரனின் கவிதைச் செல்நெறியை இன்று தீர்மானித்திருக்கின்றது. தன் புற அகச்சூழலின் நெருக்கடிகளைப் பிரச்சினைகளைத் தாண்டிக் கடந்து இலக்கிய மனதோடு தன் அனுபவங்களை தான் சந்தித்த நெருக்கடிகளை நேர்த்தியுடன் சிறந்த சொற் தெரிவுகளுடன் சொல்லிச் செல்லும் வல்லமையை சிவசேகரன் பெற்றுள்ளார். இவரின் மரபு ஓசை வயப்பட்ட கவிதைகளினுடையதான பரீச்சயம் இவரின் சில புது கவிதைகளை வாசிக்கும் போது ஒரு ஒத்திசைவை ஓசை ஒழுங்கை எம்மனச் செவிகளில் கேட்க வைக்கிறது.

**புத்தன் உறையும் சுவர்** எனும் கவிதையில்
“திக்கெட்டும் தெறிக்கும்
வீரர்களின் குருதியில் கலந்து
நிலத்தோடு உறைகிறது
மனையார் இட்டு அனுப்பிய
வெற்றித் திலகங்கள்.” என்றும்

**இல்லாமலிருத்தல்** எனும் கவிதையில்

“இன்மைக்கும் இருத்தலுக்கும்
இடையில்
ஒரு கயிறாக துரோகத்ததையும்
மறு கயிறாக நேசத்தையும் பிணைத்து
அட்டணக் காலிட்டு அமர்ந்திருக்கும்
என் துயரத்தின் ஊஞ்சலை
பின்னிருந்து ஆட்டுகிறது தனிமை” என்றும்

**குழந்தைகள் வாழ முடியாத பூமி** எனும் கவிதையில்

“வட்டமொன்றை வரைந்து முடித்த அஷிரா
அதற்கு தலைப்பிட்டிருந்தாள்
‘இது
குழந்தைகள் வாழ முடியாத பூமி” என்றும்

**இருட்டின் கண்கள்** எனும் கவிதையில்
“என்னை எட்டிப்பார்க்கும் இருட்டிற்கு
நெற்றிப் பிடரி இருகன்னங்கள் என்று
நான்கு சோடி குருணிக் கண்கள்

இச்சைகள் தீர்த்து
இளகிய தேகத்தில் காற்றை வாங்க
யன்னல் திறந்து மூடும் கணத்தில்
பல்லியைப்போல
மூலைச் சுவரோடு ஒட்டியபடி
கண்வெட்டாமல் என்னையே
உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது
கள்ள இருட்டு!” என்றும்

**எனது நூற்றியிரண்டாவது கொலை** எனும் கவிதையில்
“உனக்கு நினைவிருக்கிறதா
தொண்ணூற் றொன்பதாவது முறை
உன் மனசை நான்
கொலை செய்து முடித்த போது
நீ சிரித்த படியே உயிர்தெழுந்தாய்” என்றும்

**தாய் மண்** எனும் கவிதையில்
“கப்பல் திருவிழாவுக்கு மட்டும்
ஒன்றாய் வீட்டைவிட்டு
வெளிக்கிடும் நாங்கள்
முதன்முறையாய திருவிழா இல்லாமல்
சேர்ந்து புறப்பட்டோம் ஊரையே விட்டு…” என்றும்

**துயிலாரில்லங்களில் வழியும் கண்ணீர்** எனும் கவிதையில்
“சத்திரியர்களின் கனவுகள்
கானலாகின் போன தேசத்தின் காதுகளில்
ஒரு புதிய சுதந்திர கீதத்தை
வலிந்து நுழைக்கிறது காற்று

ஒரு பெருநேசத்தின் தீராத கண்ணீராய்
பொழியும் கார்த்திகை மழை” என்றும்

**துரோகியின் குழந்தை** எனும் கவிதையில்
“நாம் இனி பேசிக் கொள்ள
எதுவுமில்லையென பிரிந்த
ஒரு இரவின் பின் தான்
பேசத்தொடங்கின
உன்னுடன் மழை
என்னுடன் கவிதை” என்றும்

**அம்மா சொன்ன மழைக்கதை** எனும் கவிதையில்
“கறக் கறக்கென்று
கத்தியே செத்துத் தொலைக்கும்
வாய்கள் பெருத்த தவளைகளைக்கொண்டு
பூமியில் சாம நித்திரையை
கலைத்துப் போடுவதே மழைக்கு வேலை..” என்றும்

**இரவைக் கொண்டாடுதல்** எனும் கவிதையில்
“கடல் குடித்த மழையைப் போல
இருள்
என்னைத் தின்கிறது
இருள்
என்னை உயிர்விக்கிறது
இருளே என்னை
ப(ழி)லி வாங்கிக் கொ(ள்)ல்கிறது
பிறகெதற்கு வெளிச்சம்
வா என்னுடன்
இரவைக் கொண்டாடுவோம்..” என்றும்

**கனவு : கதை: சாவு** எனும் கவிதையில்
“எல்லோர் கனவிலும்
குழந்தையாக
தாயாக
தந்தையாக
சகோதரமாக
காதலாக
திருமணமாக
குந்தி இருந்தது சாவு!” என்றும்

**அம்மாவின் மழை** எனும் கவிதையில்
“ஒழுக்குக்கு சட்டியை வைத்தபடி
ஒரு வசையையும் இன்னொரு வசையில்
கொட்டிலில் இருக்கும்
அரை நனையல் விறகையும்
அடுத்த வரிசையில் தன் விதியையும்
கடைசியில் எங்களையும் வசைபாடுவாள்.

ஒரு கொடுமாரிக் குளிரில்
அம்மாவின் அசைவு நின்ற போது
நாங்கள் எல்லோரும் முதலும் கடைசியுமாய்
வசைபாடிக்கொண்டே
நனைந்தோம் மழையில்..

இதோ
இந்த மாரியில் கொட்டித்தீர்க்கும் மழையையும்
அம்மா வீட்டில் எங்கோ இருந்து
வசை பாடிக் கொண்டே இருக்கிறாள்” என்றும்

**சவக்காலப் பாடல் 2** எனும் கவிதையில்
“கிருமிகள் தின்ற மனிதர்கள்
பேசிய கடைசி வார்த்தைகளைக்
காவியபடி பிரபஞ்சம் முழுவதும்
அலைந்து கொண்டிருக்கும் காற்றில்
கலந்து அழிகிறது
கணத்திற்கொரு சாவின் ஒலி..” என்றும்

**ஒரு அந்நியனின் சுதந்திரகீதம்** எனும் கவிதையில்
“என் தேசமெங்கும் வேர் பதித்த உனது
களையின் கிளைகளை ஒவ்வொன்றாக
வெட்டிக் கொண்டிருக்கையில்
நீ எழுதி முடித்திருந்தாய் எனக்கெதிரான அடிமைச்சாசனத்தை”

என்றும் ஒரு தேர்ந்த கவிஞனாக தன்னை சிவசேகரன் நிரூபித்திருக்கின்றார்.

மேலும்,

அந்நியமாதல் 1 — 9 வரை
சித்தார்த்தன் போகும் தெரு 1 — 3 வரை
காணாமல் போன கதை 1 — 3 வரை
ஒரு அந்நியனின் சுதந்திர கீதம் 1 — 2 வரை

என்று ஒரு தலைப்பில் பல கவிதைகளை எழுதி அவற்றுக்கிடையிலான தொடர்புகளை கோடிட்டுக் காட்டியும் செல்கிறார்.

இதில் என்னால் சிலாகிக்கப்பட்ட பல கவிதைகளுக்கு இடையில் சிலவற்றை வாசிக்கும் போது ஒரு தேவை கருதி, வேண்டுமென்று, ஒரு சாயலுடன் வர வேண்டும் என்ற நோக்கோடு, வாசகனுக்கு மயக்கம் குழப்பம் ஏற்படுத்தும் விதமாக சில கவிதைகள் செய்யப்பட்டுள்ளதோ என்ற நெருடல் எனக்கு ஏற்பட்டது.

அந்நியமாதல் - 4, அந்நியமாதல் - 6, தவம், வாழ்வென்பது, சவக்கால தோத்திரம், நூறாவது கால், வரம், அடைவு, சொல், ஆகிய கவிதைகள் சமூகத்திற்கு அல்லது தனி மனிதனுக்கு சொல்ல வரும் கவிச் செய்தி என்ன கேள்வி எனக்குள் எழுந்தது. அதே நேரம் குழந்தைகள் வாழ முடியாத பூமி, என்னை உனக்கு நிரூபித்தல், தாய் மண், ஒரு அந்நியனின் சுதந்திர கீதம், தவிர்ப்பு, கனவின் ஆசை, கடவுளின் நேரலை, அவதாரம், ஆகிய கவிதைகள் எளிமை, தெளிவு, சொல் நேர்த்தி சமூகத்திற்கு அல்லது தனி மனிதருக்கு ஒரு கருத்து அல்லது செய்தியை எடுத்துச் சொல்லல் என்பவற்றில் செம்மையானவையாக திகழ்கின்றன. இவ் வேறுபாடு தான் நவீன, புதுக் கவிதைகளுக்கு இடையிலான வேறுபாடோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்று ஈழத்திலும் தமிழகத்திலும் வெளி வரும் அநேக புதுக்கவிதைகள், நவீன கவிதைகள் ஒரு நொடி, ஒரு புதிர், ஒரு விடுகதை போல ஒன்றுக்கொன்று முரண் தன்மையுள்ள விடயத்தைப் நெற்றிப் பொட்டில் அடிப்பது போல பகிர்ந்து வாசகர்களுக்கு ஒரு திடீர் அதிர்ச்சியை அல்லது ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்துபவையாக, முன்பில்லாத எமது மரபு மீறிய விடயங்களை வலிந்து பேசுபவையாக, புதிய சிந்தனைகளை கற்பனைகளை பகிர்பவையாக, எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடாது என்ற நோக்கில் படைப்பாளி எதைச் சொல்ல முயல்கிறார் என வாசகர்களைக் குழம்ப வைக்கும் விதத்தில் இருண்மையோடு எழுதப்படுபவையாக, பல் பரிமாணக் கருத்து கொண்டது என்ற ரீதியில் ஒரு விடயத்தை அல்லது செய்தியை நேரடியாக சொல்லாது பூடகமாக புரிதலுக்கு இடைஞ்சலாக பேசுபவையாக, தமிழ் இலக்கியங்களில் தவிர்க்கப்பட்ட பாலியல் ரீதியான சமாச்சாரங்கள் உட்பட சில விடயங்களை மறைமுகமாகவன்றி நேரடியாக பிரஸ்தாபிப்பவைகளாக, வழமையான புழக்கத்திலுள்ள வடிவங்களை அமைப்புக்களை கட்டுடைப்பவையாக, எழுதியவரே ஆச்சரியப்படும் படி அவர் எண்ணாத விடயங்களை விமர்சிப்போர் அர்த்தம் கற்பிக்க வைப்பவையாக, மேற்கு நாடுகளில் அவர்களின் வாழ்க்கை முறைக்கேற்ப முன் வைக்கப்பட்ட கோட்பாடுளூடாக அவர்களிலிருந்து வேறுபட்ட எமது வாழ்க்கை முறைமையை பார்க்கின்றனவாக, இன்று வெளி வந்து கொண்டிருக்கின்றன.

எமது வாழ்க்கை முறைமையை, நாம் சந்திக்கும் நம் மண் சார்ந்த பிரச்சினைகளை, நன்மை தீமைகளை, நம் நிலத்தின் வானின் கடலின் வாசத்தைப் பற்றிப் பாடாமல் பேசாமல் அந்தரத்தில் திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டு அன்றாட வாழ்வின் உணர்ச்சி மயப்பட்ட விடயங்களைத் தவிர்த்து அறிவார்ந்த தர்க்கம் மிகுந்த வரண்ட சிந்தனைகளை மட்டும் வெளிப்படுத்தி வாசகர்களிடம் பரவிச் சென்று சேர்ந்து தொற்றும் தன்மையற்ற கல்லாய், இறுகித் தனித்து செழுமை, குளுமையற்றுக் கிடக்கின்ற இந்த நவீனப் படைப்புக்களால் என்ன சமூகப் பயன் ஏற்படும், தனி மனித செயற்பாட்டில் என்ன தாக்கம் நிகழும் என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. மேலும் எழுதியவரின் பெயரையும் தலைப்பையும் மறைத்துவிட்டுப் பார்த்தால் ஒன்று போலவே தோன்றும் படைப்புக்களை வலிந்து படைப்பதில் ஈழத்து நவீன கவிதைத்துறை எந்த முன்னேற்றத்தையும் அடைந்து விடப் போவதில்லை என்பதே யதார்த்தமானது.

தமிழில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியாக பயின்று வரும் கவிதைகளில் சகல அம்சங்களையும் உள்வாங்கிய இன்றைய புதுக்கவிதைகளுக்கும் அடித்தளமாக விளங்கிய ஒரு நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த பாரதியினைக் கூட பயிலாமல், அவனின் அறிமுகமில்லாமல், “எங்களிடம் எவையுமே இல்லை” என்ற மனப்பாங்கில் வெளிநாடுகளிலிருந்து இறக்கி கடனாகப்பெற்ற வெறும் ‘இசங்’களையும் உத்தி முறைகளையும் மட்டும் பின்பற்றி எம் தமிழில் தொடர்ச்சியாக இன்றும் இருந்து வருகின்ற கவிதையின் மரபுரிமையை முற்றாக மாற்றுவது மறைப்பது மறப்பது அல்லது புறக்கணிப்பது எமது மொழியின் தனித்துவ அடையாளங்களை நாமே அழிக்க, சிதைக்க எடுக்கும் முயற்சி தான் என்பேன்.

இன்று நவீனம் பின் நவீனம் என்ற போர்வைகளில் எழுதப்படுபவைகளில் அனேகமானவை எமது மண்ணின் மக்களின் வாழ்வியல் உண்மைகளைப் பேசும் காலக் கண்ணாடிகளாக இல்லாமல் தம் தம் மேதாவித்தனத்தை காட்டவும், தம் பிரபலத்திற்கும், எவரிடமோ விருது அங்கீகாரத்திற்குமாகவும், “அரோகரா” என எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கின்ற போது “ஐயோ” எனக் கத்தி கவனயீர்ப்பு பெற முயல்வதற்கும், எழுதப்படுகின்ற படைப்புக்களுமாவுமே தோன்றி முடிந்து போகின்றன. வெறும் இசங்களையும் உத்திகளையும் விமர்சனங்களையும் நம்பி படைக்கப்படும் படைப்புக்கள் அர்த்தமற்றவையாகவே காலத்தின் தீர்ப்பின் முன் சென்று தேய்ந்து இழிவதை நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களில் புழங்காமல் தம் தம் வட்டங்களுக்குள்ளும் குழுமங்களுக்குள்ளும் ஒரு சிலருக்கிடையிலும் படைப்புக்களைப் படைத்து ஒப்பேற்றி ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த வரியொன்றிரண்டை ஒப்பிப்பதாலும் “இவையே சிறந்த படைப்புக்கள்” என்று ஒவ்வொரு குழுக்களைச் சேர்ந்தோரும் தமக்கு உவப்பான படைப்பாளர்களை அவர்களின் படைப்புக்களின் பட்டியல்களை மாறி மாறி முதுகு சொறிந்து கூறிக் கொண்டிருப்பதாலும் கடந்த காலங்களில் இலக்கிய முயற்சிகளில் எவ்வாறு எதுவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லையோ அது போலவே எதுவித பலனும் முன்னேற்றமும் இன்றும் நாளையும் ஏற்படப் போவதில்லை என்பதனை இன்றைய தலைமுறை கருத்தில் கொள்ள வேண்டும்.

எம் ஈழ மண்ணின் வாழ்வோடு ஒட்டாத எம்மண்ணைப் பிரதி பலிக்காத எமது தனித்தன்மைகளை பெருமைகளை பிறருக்கு அறிமுகப்படுத்தாத போலியான பொய்யான படைப்புகளும் விமர்சனங்களும் பயனற்றவையே. எம் மண்ணின் உயிர்ப்போடு எம் வாழ்வை வாழ்க்கை முறைமைகளை உள்வாங்கி, எமது பாரம்பரிய விழுமிய மரபுகளின் அடிப்டையில் நின்று கொண்டு, இன்றைய வாழ்வைப் புதுமையான கண்ணோட்டத்தில் பார்த்து நாளைய நவீனத்திற்கு ஏற்றாப் போல் புதிய சிந்தனை எண்ணங்கள் கற்பனைகளின் துணையோடு தேவையெனின் மேற்கத்தைய நவீன உத்தி, சொல் முறைகளையும் கறிக்கு உப்புப் போல் சேர்த்துப் படைக்கும் படைப்புக்கள் தான் எமது மொழியின் கூர்ப்புக்கும் அதன் அடையாளத்தை தனித்துவத்தை உறுதிப்படுத்தி மேம்படுத்தவும் ஈழத்தின் தனித் தன்மையான கவிதைப் பாரம்பரியத்தை மேம்படுத்தவும் உதவும் என்பேன். இதுவே இன்று இம்மண்ணில் எமக்கும் தேவையான கவிதைப் போக்கு என்பதும் எனது அபிப்பிராயம்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பர். முந்தை நாளைய புது / நவீன கவிதை நேற்றுப் பழைய கவிதையாகவும் நேற்றைய புது / நவீன கவிதை இன்றைய பழைய கவிதையாகவும் இன்றைய புது / நவீன கவிதை நாளைய புது / நவீன கவிதையாக மாறும் என்பதே யதார்த்தம். இதனடிப்படையிலேயே “இன்று நவீன கவிதையும் வழக்கொழிந்து விட்டது” என்ற குரலும் கேட்கத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் தமிழும் தமிழ்க் கவிதையும் இன்றும் இந்த நவீன யுகத்திலும் தம் அடிப்படை இயல்புகளையும் பண்புகளையும் அம்சங்களையும் மாற்றாமல் புதுமைகளை உள்வாங்கி தம்மைப் வளர்த்துக் கொண்டு செழித்தோங்கக் கூடிய வல்லமையோடு இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பது நாமெல்லோரும் பெருமை கொள்ளக் கூடிய விடயமாகும்.

எவ்வாறு மரபுக் கவிதைகளில் சில வகைகள் வெறும் சொல் விளையாட்டுக்களாக சொற்சிலம்பங்களாக மாறி பேசிய விடயங்களையே மீள மீள பேசி அர்த்தமற்று வழக்கொழிந்து போனதோ அது போலவே திடீர் அதிர்ச்சியையும் மயக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடிய மீள் வாசிப்புக்களில் ஆச்சரியங்களைத் தராத வெறும் அயர்ச்சியை மட்டும் ஏற்படுத்தக்கூடிய புது, நவீன கவிதைகளும் வாசகரிடமும் சமூகத்திடமும் காலத்தின் முன்பும் செல்லாக் காசுகளாக மாறக்கூடிய சூழலே ஏற்படும் என்பதையும் ஆற்றல் மிக்க இளம் கவிஞராக மண்ணின் மரபு வாசம் மாறாமல் படைக்கத்தொடங்கிய சிவசேகரன் மனம்கொள்ள வேண்டும் என்பது எனது அன்புரிமையுடனான வேண்டுகோள்.

இறுதியாக, ஈழத்தின் தவிர்க்க முடியாத இளம் கவிஞன் மாரீச மான் அல்லது பொய் மான்களின் பின் செல்லாமல் உண்மையான கவிதை மானை இனங்கண்டு ஒரு ‘கவிமான்’ ஆக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

10.05.2023